**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

...நீ அதை நிறைவேற்றுமாறு வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது; உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது.

**(இணைச்சட்டம்: 30:14)**

இன்றைய முதல் வாசகத்தில் மோசே, கடவுளோடும் அவரின் வார்த்தையிலும் நிலைத்து நிற்பதன் முக்கியத்துவத்தை மக்களுக்கு வலியுறுத்துகிறார். கடவுள் உயிருடன் இருக்கிறார்; செயலாற்றுகிறார். அவரின் வார்த்தைகளின் வழியாக எப்போதும் நெருக்கமாக இருக்கிறார் என்று நினைவூட்டுகிறார். “ இன்று நான் உனக்குக் கட்டளையிடும் இந்தக் கட்டளை உனக்குப் புரியாதது இல்லை; உன்னிடமிருந்து வெகு தொலையிலும் இல்லை.”

நாம் வார்த்தைக்கு கீழ்ப்படியவும், வாழவும் அழைக்கப்படுகிறோம். ஏனென்றால் வார்த்தை தான் வாழ்க்கையின் ஆதாரம். கடவுள் தம்மை வார்த்தையின் வழியாக முழுமையாக வெளிப்படுத்தியிருக்கிறார். தீவிர முயற்சி செய்பவர்கள் மட்டுமே அவரைக் கண்டுபிடிப்பார்கள். “கடவுளை நாடித் தேடுவோரே, உங்கள் உள்ளம் ஊக்கமடைவதாக” என்று இன்றைய திருப்பாடல் நமக்கு அறிவுரை கூறுகிறது. **கடவுளுடன் நெருங்கிப் பழகுவதற்கான எளிதான வழி, அவருடைய வார்த்தையை வாழ்வதே.**

இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கடவுள் நமக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார் என்பதை நினைவூட்டுகிறார். அவரின் மகன் இயேசு கிறிஸ்து வழியாக, கடவுள் நம் மத்தியில் வாழ்கிறார். கடவுள் தம் வார்த்தையைப் பேசினார், அவர் நம்மிடையே உயிருள்ளவரானார். நம்மைத் தம்முடன் ஒப்புரவாக்கும் பொருட்டு, இயேசு கிறிஸ்துவின் மூலம் நம்மோடு வாழ முடிவெடுத்தார் என்பதை பவுல் நமக்கு நினைவூட்டுகிறர்.

நற்செய்தி வாசகத்தில் இயேசு திருச்சட்ட அறிஞர்களை திருச்சட்டங்களை நோக்கி வழிநடத்துகிறார். இதைச் செய்வதன்மூலம், கடவுளை அவர்தம் வார்த்தைகளின் வழியாகக் கண்டுகொள்ளமுடியும் என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க முயற்சிக்கிறார். இதை நல்ல சமாரியனின் கதையின் மூலம் சொல்லி, கடவுளை நேசிப்பது என்பது அவருடைய வார்த்தையை நேசிப்பது என்று மேலும் இதை ஆதரிக்கின்றார். கடவுளின் வார்த்தை நல்ல சமாரியனில் ஆளுமைப்படுத்தப்பட்டுள்ளது. கடவுளின் வார்த்தை, இயேசுவே; அவரே நம்மோடு பேசுகிறார். நல்ல சமாரியனைப் போல நமக்கு எப்போதும் நெருக்கமாக இருக்கிறார்.

கடவுள் நமக்கு அடுத்திருப்பவர்களிடம் நெருக்கமாக இருக்கிறார். தாழ்ச்சியான உரிமையாளராக, எளிய வழிகளில் எப்போதும் நாம் அணுகிச் செல்லும் வகையில் இருக்கிறார். திருச்சட்ட நூல்களில், ஏழை எளிய மக்களிடத்தில், நீதியுள்ளவர்களிடத்தில், ஒதுக்கப்பட்ட மக்களிடையே, முதியோர், நோயாளிகள் மற்றும் பலவீனமானவர்களிடத்தில் நெருக்கமாக இருக்கிறார். நல்ல சமாரியனைப் போல நாமும் தேடினோமென்றால், அவரைக் காண்போம். நல்ல சமாரியன் பாதிக்கப்பட்டவர்களிடம் கடவுளைக் கண்டார்; அதனால் தான் அவர் தூண்டப்பட்டு அவருக்கு உதவி செய்தார்.

எனவே, இதில் முக்கியமானது என்னவென்றால், அன்பிற்கு எல்லைகள் இல்லை என்பதையும், மனிதகுலம் அனைத்தும், நம்முடைய எதிரிகள் உட்பட அனைவரும் நமக்கு அடுத்திருப்பவரே என்பதும் முக்கியமானது. ❖

**இன்றைய வாசகங்கள்:**

இணைச்சட்டம்: 30: 10-14;

திபா: 69: 14, 17, 30-31, 33-34, 36-37 (அ) 18: 8-11;

கொலோசையர்: 1: 15-20;

லூக்கா: 10: 25-37.

INTERNAL CIRCULATION ONLY
BUL 28/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

10 ஜூலை 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 15 ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்:

**உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் தினம் (ஜூலை 24)**

# அவருடைய வார்த்தையின் வழியாக கடவுளோடு நிலைத்திருங்கள்

அடுத்திருப்பவரோடும், அவருடைய வார்த்தையிலும் நெருக்கமாக இருக்கும் நாம் கடவுளைக் கொண்டாடுகிறோம். கண்ணால் காணமுடியாத கடவுளின் உருவத்தை நல்ல சமாரியனில் காண்பதுபோல, எல்லா சூழ்நிலைகளிலும் கடவுள் நமக்கு நெருக்கமாக இருக்கிறார்.

